# தொழில் துறை

## பெருந்தொழில்

## மானியக் கோரிக்கை எண். 27

அறிவிப்புகள்

2022–2023

வாய்மையே வெல்லும்

# தொழில் துறை

# பெருந்தொழில்

## மானியக் கோரிக்கை எண். 27

## அறிவிப்புகள்
## 2022 -2023

**தங்கம் தென்னரசு**
தொழில் துறை அமைச்சர்

1) தொழில் துறையினை " தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை" என பெயர் மாற்றம் செய்யப்படும்.

பாரம்பரிய துறைகள், உற்பத்தித் துறை, வளர்ந்து வரும் துறைகள் மற்றும் சேவைத் துறைகளில் முதலீட்டை ஊக்குவிப்பதன் மூலம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சியினை தொழில் துறை உறுதி செய்கிறது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மின் வணிகம் (e-commerce) உள்ளிட்ட உள்நாட்டு வர்த்தகத்திற்கும் தொழில் துறை துணை புரிகின்றது. இதன் காரணமாக, தொழில் துறை " தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை" (Industries, Investment Promotion & Commerce Department) என பெயர் மாற்றம் செய்யப்படும்.

## 2) முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்கல் ஆணையரகம் உருவாக்கப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கீழ் இயங்கும் தொழில் வணிக ஆணையரகம் போன்று, நிர்வாக வசதிகளைக் கருத்தில் கொண்டு, தொழில் துறையின் கீழ், மாநில அளவில் ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்கல் ஆணையரகம் புதிதாக உருவாக்கப்படும்.

இதற்கென ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்கல் ஆணையர் பதவி உருவாக்கப்படும். வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் இதன் அலுவல் முறை ஆணையராக செயல்படுவார்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சி மற்றும் மேம்பாடு, தொழிலாளர் திறன்களை மேம்படுத்துதல், கொள்கைகள், திட்டங்கள் மற்றும் வரைமுறைகள், அவ்வப்போது இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்துதல் போன்றவை இந்த ஆணையரக பணிகளாக இருக்கும்.

ஆண்டொன்றுக்கு 36 இலட்சம் ரூபாய் தொடர் செலவினத்தில் இந்த ஆணையரகத்தில் மொத்தமாக 7 பணியிடங்கள் உருவாக்கப்படும்.



## 3) விரிவான சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலைகள் மேம்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைத் துறையுடன் இணைந்து, தற்போது செயல்பாட்டிலுள்ள விரிவான சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (CRIDP) கீழ் மாநிலத்திலுள்ள முக்கிய தொழில் பூங்காக்கள் மற்றும் தொழிலகங்களுக்கான முக்கிய இணைப்பு சாலைகள் தொழில் துறையினால் முன்னிலைப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்.

4) ஹைட்ரஜன் உற்பத்தித் துறையில் பெரிய அளவில் முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு, "ஹைட்ரஜன் எரிசக்திக் கொள்கை" வெளியிடப்படும்.

நீடித்த மற்றும் நிலையான தொழில் நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கத்தினை குறைப்பதில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தி வருகிறது. ஹைட்ரஜன் உற்பத்தியின் பல்வேறு வகைகளில் (பசுமை ஹைட்ரஜன், நீல ஹைட்ரஜன்) முதலீடுகளை ஊக்குவிக்கும் பொருட்டு, "ஹைட்ரஜன் எரிசக்திக் கொள்கை" வெளியிடப்படும்.



5) சுற்றுச்சூழலின் தரத்தை மேம்படுத்த, "எத்தனால் கொள்கை 2022" வெளியிடப்படும்.

எண்ணெய் சார்ந்த எரிபொருள் தேவையை குறைத்து, சுற்றுச்சூழலின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன், எரிபொருளுடன் எத்தனால் கலப்பதை உறுதி செய்ய, ஒன்றிய அரசின் கொள்கையின்படி, தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே இத்துறையில் பல முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஆர்வமாக உள்ளனர். இதன் மூலம் கரும்பு மற்றும் மக்காச்சோளம் போன்ற பயிர்களை பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல விலை மற்றும் உரிய நேரத்தில் பணப்பட்டுவாடா பெற வழிவகை செய்யப்படும். எத்தனால் உற்பத்தியாளர்களின் இணக்க சுமைகளை குறைத்து, சமபங்களிப்பு, நிலைத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்தி, முதலீட்டாளர்கள் மற்றும் பெரும்பான்மை சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசால் "எத்தனால் கொள்கை 2022" வெளியிடப்படும்.

6) தமிழ்நாடு தொழில் கொள்கை 2021-ன்கீழ் வழங்கப்படும் நிலையான ஊக்கச் சலுகைகளுடன், கூடுதலாக தொழில் நுட்ப ஜவுளிகள் மற்றும் ஆடைகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் சிறப்பு திட்டம் வெளியிடப்படும்.

ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தியில், அகில இந்திய அளவில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருவதுடன், இத்துறையில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 20 சதவிகித பங்களிப்பினை அளித்து வருகின்றது. உயர் மதிப்புக் கூட்டல் மற்றும் அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்கம் போன்ற காரணிகளால், மாநிலத்திற்கு முதலீடுகளை ஈர்க்கும் முக்கிய துறையாக தொழில் நுட்ப ஜவுளி மற்றும் ஆடைகள் உற்பத்தி துறை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தத் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு தொழில் கொள்கை 2021-ன்கீழ் வழங்கப்படும் நிலையான ஊக்க சலுகைகளுடன் கூடுதலாக, தொழில் நுட்ப ஜவுளிகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி துறைக்கான சிறப்பு திட்டம் ஒன்று வெளியிடப்படும்.



7) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிய சிப்காட் தொழிற்பூங்கா ஒன்று 1800 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 3000 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில், ஏற்கனவே, இரண்டு நிலைகளாக 2,093 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் தொழிற்பூங்கா ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், சூளகிரியில் சிப்காட் தொழிற்பூங்கா நிலை- I மற்றும் நிலை–IIக்காக, சுமார் 2,923 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொழில்மனைக்கான தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டும், இம்மாவட்டத்தின் சாதகமான அமைவிடத்தின் (locational advantage) காரணமாகவும், தேன்கனிக்கோட்டை வட்டம், நாகமங்கலம் கிராமம் மற்றும் சூளகிரி வட்டம், அயனம்பள்ளி மற்றும் உத்தனப்பள்ளி கிராமங்களில் சுமார் 3,000

ஏக்கர் நிலப்பரப்பில் சாலை, மழைநீர் வடிகால், நீர் வழங்கல் மற்றும் விநியோகம், தெருவிளக்கு அமைத்தல், பசுமையாக்கம், திடக்கழிவு மேலாண்மை, பாதுகாப்பு போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளுடன், 1800 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒரு புதிய சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கப்படும். இத்தொழிற்பூங்கா மூலம் சுமார் 21,000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 16,800 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



8) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மற்றும் குருபரப்பள்ளி தொழிற்பூங்காக்களில் சுமார் 26 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மற்றும் குருபரப்பள்ளி சிப்காட் தொழிற்பூங்காக்களில் 26 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், சாலைகளை விரிவுபடுத்துதல் மற்றும் பலப்படுத்துதல், ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலைகளை சீரமைத்தல், சேவை சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் தனியார் பங்களிப்புடன் (PPP mode) மேற்கொள்ளப்படும்.

9) ஓசூர் மற்றும் தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காக்களில் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சரக்கு வாகன முனையங்கள் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

போக்குவரத்தை எளிதாக்குவதற்கும், கனரக வாகனங்கள் நிறுத்துவதை ஒழுங்குபடுத்துவதற்கும், ஓசூர் சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தேர்வாய்கண்டிகை சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், தலா 100 கனரக வாகனங்களை நிறுத்தும் வசதியுடன் கூடிய சரக்கு வாகன முனையங்கள் தனியார் பங்களிப்புடன் (PPP mode) அமைக்கப்படும்.



10) ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காவில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில், வணிக வளாகம் மற்றும் உணவகம் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காவில் பணிபுரிபவர்களின் வசதியினை மேம்படுத்தும் பொருட்டு 1.36 ஏக்கர் பரப்பளவில் சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகம் மற்றும் உணவகம், தனியார் பங்களிப்புடன் (PPP mode) அமைக்கப்படும்.

11) தஞ்சாவூர் மற்றும் உதகமண்டலத்தில் சுமார் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படும்.

டைடல் பூங்கா நிறுவனத்தை ஏற்படுத்தியதன் மூலம் இந்தியாவிலேயே ஒரு உலகத்தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்பப் பூங்காவை அமைத்திருக்கும் முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இது சென்னையின் அடையாள சின்னங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. சென்னையில் உள்ள டைடல் பூங்காவின் வெற்றியைப் பின்பற்றி, தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கான (IT/ITES) உள்கட்டமைப்பினை தமிழ்நாட்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களுக்கு விரிவுபடுத்தும் முயற்சியின் முதற்கட்டமாக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமானது (TIDCO), சென்னையில் உள்ள டைடல் பூங்காவுடன் இணைந்து கூட்டு முயற்சியில் திருப்பூர், விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர் மற்றும்



சேலம் ஆகிய மாவட்டங்களில் 50,000 முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பில் மினி டைடல் பூங்காக்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த மாவட்டங்களுடன் கூடுதலாக, தகவல் தொழில்நுட்ப புரட்சியை ஏற்படுத்தவும், அதன் பயனை இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லவும், தஞ்சாவூர் மற்றும் உதகமண்டலத்தில் சுமார் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்படும்.

12) காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுமார் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்துறை தொழிற்பூங்கா ஒன்று தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூர் அருகே சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு பல்துறை தொழிற்பூங்காவை DLF நிறுவனத்துடன் இணைந்து உருவாக்க டிட்கோ திட்டமிட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்தில் தகவல் தரவு மைய பூங்காவை (Data Centre Park) உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் முழுமையாக முடிவடையும்போது சுமார் 5000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் எனவும், சுமார் 1000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



13) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொழிலக வீட்டுவசதி திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்

டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், ஓசூர் அருகே கைபேசி உதிரி பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டம் முடிவடையும்போது நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் சுமார் 18,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவன ஊழியர்களுக்கு தங்கும் இடவசதிகளை ஏற்படுத்தும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், நாகமங்கலம் கிராமத்தில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் TIDCO, TNIFMC மற்றும் TEPL ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து கூட்டாண்மையாக விடியல் ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் (VHPL) என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தை (Special Purpose Vehicle) ஏற்படுத்தி, அதன் மூலம் தொழிலக வீட்டுவசதி திட்டம் செயல்படுத்தப்படும்.

14) தமிழ்நாட்டில் அதிவேக இரயில் வழித்தடத்தை அடையாளம் காண்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு சுமார் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் இரயில் இணைப்புகளைக் (Networks) கொண்ட, இயந்திரமயமாக்கப்பட்ட போக்குவரத்து மிகுந்த மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். போக்குவரத்தில் பயணிகளின் சராசரி பயண நேரத்தைக் குறைப்பதற்காக, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளை இணைக்கும் வகையில், ஒரு அதிவேக தொடர்வண்டி பாதையை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தற்போதுள்ள உட்கட்டமைப்பில் நெரிசலை குறைத்து, இணைப்பை மேம்படுத்தி, மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும். இந்த வழிதடத்தால் இணைக்கப்படக்கூடிய இடங்களை அறியவும் மற்றும் இந்திய இரயில்வேயுடன் கூட்டாக வழித்தடத்தை நிறுவுவதற்காக தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறுகளை அடையாளம் காணவும், TIDCO நிறுவனம் மூலம் சுமார் 3 கோடி ரூபாய் செலவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.



15) தமிழ்நாட்டில் பிரத்யேக சரக்குப் போக்குவரத்திற்கான வழித்தடத்தை (Dedicated Freight Corridor) அடையாளம் காண்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு, சுமார் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

ஒரு பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று பிரத்யேக சரக்குப் போக்குவரத்திற்கான வழித்தடங்கள் அமைப்பது ஆகும். தற்போது, பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்திற்கு தொடர்வண்டி போக்குவரத்து உதவுகிறது. பிரத்தியேக சரக்கு போக்குவரத்து வழித்தடத்தை அமைப்பதன் மூலம் சரக்குப் போக்குவரத்தின் நேரத்தை குறைப்பதோடு, சரக்குப் போக்குவரத்தால் பயணிகள் போக்குவரத்து வழித்தடத்தில் ஏற்படும் சிரமத்தையும் களையலாம். தமிழ்நாட்டில் இத்தகைய சரக்கு இரயில் போக்குவரத்து வழித்தடங்களை அமைப்பதற்கு, டெடிகேட்டட் ஃப்ரைட் காரிடர் கார்பரேஷன் ஆஃப் இந்தியாவுடன் இணைந்து, தொழில்நுட்ப-பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வு TIDCO நிறுவனத்தால் சுமார் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

16) வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்கள் தொடர்பாக ஒரு பொது வசதி மையம், சுமார் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கோயம்புத்தூரில் அமைக்கப்படும்.

வானூர்த்தி வடிவமைப்பு மற்றும் மேம்பாடு (Aerodesign and development), செயல்படும் களம் (Domain) மற்றும் MRO, தொழில் துறை தானியங்கியல் (Industrial Robotics), உற்பத்தி, மின்சாரம் (Electricals), கலவை (Composites), வான்பயண மின்னணுவியல் (Avionics), எந்திர மின்னணுவியல் மற்றும் பரிசோதனை (Mechatronics and Testing) ஆகியவற்றில் வளரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு உதவும் வகையில், டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து, வான்வெளி மற்றும் பாதுகாப்பு தொழில்கள் தொடர்பாக ஒரு பொது வசதி மையம், சுமார் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் டிட்கோ நிறுவனத்தால் நிறுவப்படும். இந்தியாவின் வான்வெளி மற்றும் பாதுகாப்பு உள்கட்டமைப்பின் அடித்தளத்தை பலப்படுத்தவும் மற்றும் புதிய தலைமுறை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வளர்த்தெடுக்கவும் இது உதவும்.



17) விமானத்தை இயக்க பயிற்சி தரும் நிறுவனங்களை (Flying Training Organizations) அமைக்க துணை புரிதல்.

2037ஆம் ஆண்டில், விமான பயணிகள் போக்குவரத்து 52 கோடியை எட்டும் என்றும் சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் மதிப்பிட்டுள்ளது. திட்டமிடப்பட்ட வளர்ச்சியை அடைவதற்கு நாட்டில் அதிக எண்ணிக்கையில் விமானிகளும், அவர்களுக்கு பயிற்சியளிக்க புதிய வசதிகளும் தேவைப்படுகின்றன. எனவே, இதனை பூர்த்தி செய்யும் விதமாக மாநிலத்தில் பல விமானத்தை இயக்க பயிற்சி தரும் நிறுவனங்களை அமைக்க டிட்கோ துணை புரியும். இதன் மூலம் மாநில இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், மதிப்புமிக்க அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தவும் இயலும்.

18) கோயம்புத்தூரில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு துறைக்காக, தயாரிப்பிற்கு பிந்தைய செயல்பாடுகளுக்கான அலகு (Post Processing Unit) ஒன்று 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

வான்வெளி மற்றும் பாதுகாப்பு பாகங்களுக்காக செய்யப்படும் தயாரிப்பிற்கு பிந்தைய நடவடிக்கைகளில் முக்கியமானது மேற்பரப்பு பூச்சு (Surface treatment) மற்றும் இயந்திர உருவாக்கத்திற்கு பிந்தைய செயலாக்கம் (Post Machining Process) தமிழ்நாடு பாதுகாப்பு வழித்தடத்தில் (Defence Corridor), தயாரிப்பிற்கு பிந்தைய செயலாக்க தேவைகளை நிறைவேற்றுவதற்கு தற்போது இருக்கும் வசதி மற்றும் திறன் போதிய அளவில் இல்லை என்பதால், இவ்வசதியை தமிழ்நாட்டில் உள்ள வான்வெளி தொழில் நிறுவனங்களுக்கு கிடைப்பதை உறுதிசெய்யவும், வான்வெளி தொழில்களுக்கான சேவையை அளிப்பதற்கு மற்ற தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், கோயம்புத்தூர்



அருகே தகுந்த தனியார் நிறுவனத்துடன் இணைந்து மேற்பரப்பு பூச்சு மற்றும் வெப்பமளித்தல் (Heat treatment) போன்ற வசதிகளை அளிக்கும் தயாரிப்பிற்கு பிந்தைய செயல்பாடுகளுக்கான அலகு, 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இது வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறை தொடர்பான வளர்ச்சிக்கும், தமிழ்நாடு பாதுகாப்பு வழித்தடத்திலிருந்து தரமான உதிரிபாகங்கள் உருவாவதற்கும் வழிவகுக்கும்.

## 19) பிரத்யேக பாதுகாப்பு பூங்காக்கள் (Thematic Defence Parks) சுமார் 50 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்

வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறை சார்ந்த துணை துறைகளுக்காக "பிரத்யேக பாதுகாப்பு பூங்காக்கள்" சுமார் 50 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், டிட்கோ நிறுவனம் மூலம் அமைக்கப்படும். மேலும், சிப்காட் நிறுவனத்தால் வல்லம்-வடகால், மாநல்லூர், திண்டிவனம், தர்மபுரி, ஓசூர், மணப்பாறை, தூத்துக்குடி, சூலூர் மற்றும் அன்னூர் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ள தொழிற் பூங்காக்களில் இந்த பிரத்யேக பாதுகாப்பு பூங்காக்களுக்கு இடம் ஒதுக்கப்படும். வல்லம்-வடகாலில் இத்தகு பிரத்யேக பாதுகாப்பு பூங்கா செயல்பாட்டில் உள்ளது. சூலூரில், இது விரைவில் செயல்பட தொடங்கும் நிலையில் உள்ளது.



## 20) கோயம்புத்தூரில் பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா ஒன்று 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சரக்கு போக்குவரத்து உள்கட்டமைப்புகளுக்கான வளர்ந்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டு, கோயம்புத்தூரில் பல்முனைய சரக்கு போக்குவரத்து பூங்கா ஒன்றினை, தேசிய நெடுஞ்சாலை லாஜிஸ்டிக்ஸ் மேலாண்மை நிறுவனத்துடன் இணைந்து, சுமார் 70 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 300 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனம் மூலம் அமைக்கப்படும். இந்த சரக்கு போக்குவரத்து பூங்கா, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும், சரக்குப் போக்குவரத்து மற்றும் சரக்குக் கிடங்கு செலவினங்களைக் குறைப்பதற்கும், மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசலின்றி இருப்பதற்கும் வழிவகை செய்யும்.

21) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன்களுக்கு 3 சதவீதம் மற்றும் 6 சதவீதம் வட்டிமானியம் மேலும் ஒரு ஆண்டுக்கு நீட்டித்து வழங்கப்படும்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடன் பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிலையான வளர்ச்சிக்கும், உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தை எதிர்கொள்ளும் திறன் மற்றும் இந்த நிறுவனங்களில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் வாழ்வாதாரத்திற்கும், இந்நிறுவனங்களின் செயல்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டும். அதற்கு குறைந்த வட்டி விகிதத்தில் போதுமான கடன் தொகை உரியநேரத்தில் இந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும். குறைந்த வட்டியில் கடன் கிடைக்கும் பட்சத்தில் நிறைய முதலீடுகளை ஈர்க்க இயலும். இதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தால் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு அளிக்கப்படும் 3 சதவீதம் மற்றும் 6 சதவீத வட்டி மானியம் மாநில அரசால் மேலும் ஒரு ஆண்டுக்கு (நிதியாண்டு 2022-23) நீட்டித்து வழங்கப்படும். இதன்மூலம் தோராயமாக 58 கோடி ரூபாய் அரசுக்கு செலவினம் ஏற்படும்.



22) அரியலூர் புதிய சிமெண்ட் ஆலையில் மாற்று எரிபொருள் எரியூட்டும் அமைப்பு ஒன்று (Alternate Fuel Feeding System) 30 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் கிளிங்கர் உற்பத்தி செய்வதற்கு நிலக்கரியை மட்டுமே எரிபொருளாகப் பயன்படுத்தி வருகிறது. கரியமில வாயு வெளியேறுவதை குறைக்கவும், சுற்றுச்சூழல் பாதிப்புகளை கட்டுப்படுத்தவும், படிம எரிபொருளான நிலக்கரிக்கு மாற்றாக, RDF உள்ளிட்ட மாற்று எரிபொருட்களை பயன்படுத்தவும், இந்தியாவில் சிமெண்ட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன. அதனை பின்பற்றி, 25 சதவீத மாற்று எரிபொருள் பயன்பாட்டை படிப்படியாக அடைய, அரியலூர் புதிய சிமெண்ட் ஆலையில் 30 கோடி ரூபாய் செலவில் மாற்று எரிபொருள் எரியூட்டும் அமைப்பு (Alternate Fuel Feeding System) ஒன்று, தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் நிறுவப்படும்.

23) அரியலூர் சிமெண்ட் ஆலையில் 2.50 கோடி ரூபாய் செலவில் 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு உடைய ஒரு புதிய மூடும் வசதி கொண்ட நிலக்கரி கிடங்கு (Closed Coal shed) அமைக்கப்படும்.

அரியலூர் சிமெண்ட் ஆலையில் கிளிங்கர் உற்பத்தி செய்வதற்கு மாதமொன்றுக்கு தேவைப்படும் 16,000 மெட்ரிக் டன் நிலக்கரி பாதுகாப்பாக இருப்பில் வைக்க வேண்டியுள்ளது. தற்போது 5,000 மெட்ரிக் டன் நிலக்கரியை சேமித்து வைக்கும் மூடிய கிடங்கு ஒன்று உள்ளது. மழை போன்ற இயற்கை சீற்றங்களிலிருந்து மீதமுள்ள நிலக்கரியை பாதுகாப்பதுடன், மேலும் தேவையான நிலக்கரியை பாதுகாத்து வைக்க ஏதுவாக, அரியலூர் சிமெண்ட் ஆலையில் 10,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு புதிய மூடும் வசதி கொண்ட நிலக்கரி கிடங்கு 2.50 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் அமைக்கப்படும்.



24) அரியலூர் புதிய சிமெண்ட் ஆலையில் உற்பத்தி ஆகும் சிமெண்ட்டை பழைய ஆலையின் சிமெண்ட் கொள்கலன்களுக்கு (Cement silos) கொண்டு செல்லும் அமைப்பு (Cement conveying system) ஒன்று 3.50 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

அரியலூரில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் புதிய சிமெண்ட் ஆலையில் "வலிமை" என்ற பெயரில் புதிய உயர்ரக சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த "வலிமை" சிமெண்டை, பழைய ஆலையிலும் சேமித்து மூட்டைகளாக பேக்கிங் செய்து விற்பனை செய்வதற்கு ஏதுவாக, பழைய ஆலையின் சிமெண்ட் கொள்கலன்களுக்கு (Cement silos) கொண்டு சேர்க்க, புதிய "சிமெண்ட் கொண்டு செல்லும் அமைப்பு" (Cement conveying system) ஒன்று, 3.50 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

25) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை வளாகத்தில், மணிக்கு 80 மெட்ரிக் டன் அரவை திறன் கொண்ட ஒரு புதிய சிமெண்ட் அரவை இயந்திரம் ஒன்று அதற்குரிய கட்டமைப்பு வசதிகளுடன் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

1969ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் தற்பொழுது பயன்பாட்டில் உள்ள இரண்டு சிமெண்ட் அரவை இயந்திரங்கள் மிக பழமையான காரணத்தால் அதிக அளவில் பராமரிப்பு பணிகள் தேவைப்படுகின்றன. எனவே, தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் உள்ள அதிக அளவிலான சிமெண்ட் தேவையினை கருத்திற்கொண்டு, ஆலங்குளம் சிமெண்ட் ஆலை வளாகத்தில் மணிக்கு 80 மெட்ரிக் டன் திறனுடைய புதிய சிமெண்ட் அரவை இயந்திரம் ஒன்று அதற்குரிய கட்டமைப்பு வசதிகளுடன் சுமார் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் அமைக்கப்படும்.

**தங்கம் தென்னரசு**
தொழில் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.